VI

## ஜோலார்பேட்டை நகராட்சி

ந. க. ஆர்.எஸ்1/15554/2018, நாள் : 01-08-2019

(ந.க.எண். 644/2017/எச்1)

### பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணைவிதிகள் – 2019

நகரமன்ற தீர்மான எண் 316, நாள் : 28-02-2019

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 (சட்ட எண். 29/1986)–ல் பிரிவு 3, 6 மற்றும் 25–களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306–ன்படி 2019–ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12–ன் கீழ் பிளாஸ்டிக் பொருத்த விற்பனை, உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், விற்பனை, எடுத்துச் செல்லுதல், நெகிழி பயன்படுத்துதல் முதலியன தடை செய்யப்பட்டு அபராத தொகை விதிக்கப்பட்டுள்ளதை கீழ்க்கண்டவாறு உப விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1 (i) **செயலாக்க அதிகாரி** : நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர்.

(ii) **ஆய்வு நடத்தும் அதிகாரி** : ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.

(iii) **மேல்முறையீட்டு அலுவலர்** : இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல்முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.

(iv) **தண்டனைகள் விதிக்கும் முறைகள்** : மேற்படி சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஷரத்துக்களை மீறுபவர்களுக்கு உடனடி ஸ்தல அபராதம், குடிநீர் இணைப்பு துண்டித்தல், பொருள்களை பறிமுதல் செய்தல் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான உரிமம் ரத்து செய்தல் (D&O) முதலியன தண்டனை முறைகள்.

5. (v) **வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு** :

1. மொத்த சேமிப்பாளர் / விநியோகிப்பாளர்

a) 1 ச. அடி முதல் 500 ச. அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்

b) 501 ச. அடி முதல் 1000 ச. அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்

c) 1001 ச. அடி முதல் 1500 ச. அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்

d) 1501 ச. அடி முதல் 2000 ச. அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்

e) 2000–ம் அதற்கு மேல்

2. **வணிக வளாகங்கள்** :

a) பெரிய மற்றும் சிறிய துணிக்கடைகள்,

b) பல்பொருள் அங்காடிகள் பெரியது,

c) திரையரங்குகள்.

d) அரசு மதுபானக்கடை, மதுபான விற்பனைக் கூடங்கள் (BARS) மனமகிழ் மன்றம் முதலான இதர இனங்கள்,

e) கல்வி நிறுவன வளாகங்கள்,

f) அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் வளாகங்கள்,

g) திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகள் முதலானவை,

h) பெரிய, நடுத்தர மற்றும் சிறிய தொழிற்சாலைகள்,

3. மளிகைக் கடைகள், காய்கறிக்கடைகள், பழக்கடைகள், மருந்துக்கடைகள், பழச்சாறு விற்பனைக்கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்,

4. சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோர கடைகாரர்கள் மற்றும் இதர வணிகம் செய்பவர்கள்.

Scanned by CamScanner

## II தண்டனைகள் விபரம்

**பிரிவு 306 (28–A)-இன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்**

| வரிசை எண். | குற்றங்கள் | முதன் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஐந்தாயிரம் ரூபாய் | பத்தாயிரம் ரூபாய் | இருபத்தைந்தாயிரம் ரூபாய் |
| 2. | வணிக வளாகங்கள், துணிக் கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப் பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | இரண்டாயிரம் ரூபாய் | ஐந்தாயிரம் ரூபாய் | இருபத்தைந்தாயிரம் ரூபாய் |
| 3. | மளிகைக் கடைகள் மற்றும் மருந்துக் கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஓராயிரம் ரூபாய் | இரண்டாயிரம் ரூபாய் | ஐந்தாயிரம் ரூபாய் |
| 4. | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஐநூறு ரூபாய் | ஓராயிரம் ரூபாய் | இரண்டாயிரம் ரூபாய் |

ஜோலார்பேட்டை,
2019 ஜூலை 11.

(ஒப்பம்) ..................,
ஆணையாளர்,
ஜோலார்பேட்டை நகராட்சி.

Scanned by CamScanner